ஸ்ரீ ஹரி :

ஸ்ரீ மதே ராமானுஜாய நம :

## தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை
## தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்

# திருத்தஞ்சை (துவாதச)
# 83 ஆவது ஆண்டு

tnhrce.org

# 24 கருட மகோத்ஸவ
# பத்திரிகை



**உற்சவங்கள்**
**14.06.2017 முதல்**
**17.06.2017 வரை**
**நடைபெறும்**

**அதிவிமர்சையாக**
**இவ்வாண்டு**
**ஆனி மாதம் 1ஆம் தேதி**
**15.06.2017 வியாழக்கிழமை**
**24 கருட சேவை**
**நடைபெறும்**

ஸ்ரீ ஹரி :

ஸ்ரீ மதே ராமானுஜாய நம :

ஸ்ரீ நீலமேக மணிபர்வத வீர நரசிம்ம பரப்பிரம்மனே நம :

எம்பிரான் ! எந்தை என்னுடைய சுற்றம் எனக்கரசு ! என்னுடைய வாணாள் அம்பினாலரக்கர் வெருக்கொள நெருக்கி அவருயிர் செகுத்த எம் அண்ணல் !
வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக்கோயிலே வணங்கி நம்பிகாள் ! உய்யநான் கண்டு கொண்டேன் நாராயணா வென்னும் நாமம் !

ஸ்ரீயப் பதியாய் அவாப்த்த சமஸ்த கல்யாண குண சம்பன்னனாய் பராச மார்க்கண்டேய மகரிஷிகளுக்குப் ப்ரத்யக்ஷயமாய் தஞ்சகாசுரனுடைய சரணாகதியை ஏற்று அவ்வரசுனுடைய வேண்டுகோளுக்கிணங்கி மற்றெங்கு மில்லா தனிச்சிறப்புடன் லெக்ஷ்மி சமேத கருடாருடராய் செங்கோலேந்தி சேவை சாதிப்பவராய் பூதத்தாழ்வார், திருமங்கை யாழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெற்ற ஸ்ரீ பராசரக்ஷேத்திரம் என்னும் தஞ்சை மாநகர் வெண்ணாற்றங்கரையில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ பூமி நீளா சமேத ஸ்ரீ நீலமேகப் பெருமாள் தொடக்கமான பெருமாள்களுக்கு நாளது ஸ்ரீ ஹேவிளம்பி ஆண்டு வைகாசி மாதம் 31ஆம் தேதி 14.06.2017 புதன்கிழமை முதல் 17.06.2017 சனிக்கிழமை முடிய கீழ்கண்ட விவரப்படி உத்ஸவங்கள் நடைபெறும்

**திருமங்கை ஆழ்வார் - மங்களாசாசனம்** 14.06.2017 புதன்கிழமை பகல் 12.00 மணிக்கு மேல் வெண்ணாற்றங்கரை ஸ்ரீநரசிம்மப் பெருமாள் சன்னதியில் திவ்யதேச பெருமாள்களுக்குத் திருமங்கை ஆழ்வார் மங்களாசாசனம் நடைபெறும் **24 கருட சேவை** 15.06.2017 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு வெண்ணாற்றங்கரையிலிருந்து திவ்யதேச பெருமாள்களுடன் கருட வாகனத்தில் புறப்பட்டு காலை 7.00 மணி முதல் 11.00 மணி வரை **கீழராஜவீதி, தெற்குராஜவீதி, மேல ராஜவீதி, வடக்கு ராஜவீதிகளில்** சேவையாகும். **15 நவநீத சேவை** 16.06.2017 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு வெண்ணாற்றங்கரையிலிருந்து புறப்பட்டு காலை 7.00 மணி முதல் 10.30 மணி வரை கீழராஜவீதி, தெற்குராஜவீதி, மேல ராஜவீதி, வடக்கு ராஜவீதிகளில் சேவையாகும். 17.06.2017 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வெண்ணாற்றங்கரை சந்நிதிகளில் **விடையாற்றி உத்ஸவம்** நடைபெறும் மேற்படி உத்ஸவங்களுக்கு பாகவதர்களுடன், குடும்பத்துடனும் எழுந்தருளி சேவித்தும் ததியாராதனையில் கலந்துகொண்டும் எம்பெருமான் கிருபைக்குப் பாத்திரர்கள் ஆகும்படி பிரார்த்திக்கின்றோம்.விபரங்களை மற்றவர்களுக்கும் தெரிவிக்க வேண்டுகிறோம்.

tnhrce.org

இங்ஙனம்

திரு **ஜெ.பரணிதரன்** பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர் / பொருளாளர் மற்றும் மேலாளர்

இராஜஸ்ரீ **சி.பாபாஜி ராஜா பான்ஸ்லே** பி.இ
பரம்பரை அறங்காவலர்

திரு **எஸ்.மாதவன்** எம்.ஏ
செயல் அலுவலர் / கண்காணிப்பாளர்

திரு **சி.சுரேஷ்**
கண்காணிப்பாளர்

திரு **ஆ.ரவிச்சந்திரன்**
கண்காணிப்பாளர்

## ஸ்ரீ ராமானுஜ தர்சன சபை, 1291, தெற்குராஜவீதி, தஞ்சாவூர் - 9

**திருமங்கை ஆழ்வார் மங்களாசாசனம்** 14.06.2017 புதன்கிழமை பகல் 12.00 மணிக்கு மேல் வெண்ணாற்றங்கரை ஸ்ரீ நரசிம்மப் பெருமாள் சன்னதியில் திவ்யதேச பெருமாள்களுக்கு ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் மங்களா சாசனம் நடைபெறும்

அன்று பகல் ததியாராதனம் : ஸ்ரீமான் டாக்டர்.**T.R. சேஷாத்ரி குடும்பத்தினர்** அவர்களின் உபயத்தில் நடைபெறும்.

அன்று இரவு ததியாராதனம் : ஸ்ரீமான் **S. நடராஜமாணிக்க நாட்டார் சன்ஸ்** அவர்கள் உபயத்தில் நடைபெறும்.

புஷ்ப உபயம் : ஸ்ரீமான் **R. சேதுராமன்** அவர்கள் துணைவேந்தர், **சாஸ்த்ரா பல்கலைக்கழகம்**, தஞ்சாவூர்.